Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556 நடுநிலை நாளிதழ் ISO : 9001:2015; QT-57977/1125

DHINATH DHALAM Tamil & English daily Paper

**செய்தியாளர்கள் தேவை**



தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை

☎ 94440 82959

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 99 | திங்கள் Monday | 09.02.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

# தமிழகத்திற்கான ரெயில்வே திட்டங்களுக்கு நிதி ஒதுக்க வேண்டும்

## பிரதமர் மோடிக்கு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் கடிதம்





தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் ரயில்வே திட்டங்களுக்கான நிதியைவிரைந்துவழங்க பிரதமர் நரேந்திர மோடிக்கு முதல்வர் ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் ரயில்வே திட்டங்களுக்கான நிதியை விரைந்து வழங்கிடவும், முக்கியமான திட்டங்களை மீண்டும் தொடங்கிடவும், தமிழ்நாட்டிற்குக் கூடுதலாக புதிய ரயில்வே திட்டங்களை அனுமதித்திடவும் ரயில்வே அமைச்சகத்திற்கு உரிய அறிவுரைகளை வழங்கிடுமாறு கோரி, பிரதமர் நரேந்திர மோடிக்கு, முதல்வர் மு.க.ஸ்டாலின் (பிப். 8) கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில், தமிழ்நாட்டில் மத்திய அரசினால் நிறைவேற்றப்பட்டு வரும் ரயில்வே திட்டங்களின் தற்போதைய நிலை குறித்து தெரிவித்து, நிலுவையில் உள்ள பிரச்னைகளுக்கு, குறிப்பாக, நிலம் கையகப்படுத்தலுக்கான நிதியை முறையாகவிடுவித்தல் மற்றும் கிடப்பில் போடப்பட்டுள்ள திட்டங்களை மீண்டும் தொடங்குதல் போன்றவற்றில் இந்தியப் பிரதமர் தலையிட்டு உரிய நேரத்தில் தீர்வு காண வேண்டுமென கேட்டுக் கொண்டுள்ளதோடு, ஊடகங்களில் இதுதொடர்பாக பரவி வரும் உண்மைக்குப் புறம்பான சில செய்திகளுக்காகவும் இக்கடிதத்தினை தான் எழுதுவதாக தமிழ்நாடு முதல்வர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்நாட்டில், மத்திய அரசின் பல்வேறு ரயில்வே திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக 2500.61.06 ஹெக்டேர் பரப்புள்ள நிலங்களைக் கையகப்படுத்துவதற்கு நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது என்றும், இதில் 931.52.96 ஹெக்டேர் பரப்புள்ள நிலங்களுக்கு ரயில்வே துறை நிதியை ஒதுக்கவில்லை என்றும் குறிப்பிட்டுள்ள முதல்வர் , ரயில்வே துறையிடமிருந்து சமீபத்தில் திருத்தப்பட்ட நிலத் திட்ட அட்டவணை (LPS) பெறப்பட்ட இரண்டு திட்டங்களுக்குத் தேவையான நிலங்களைக் கையகப்படுத்துவதற்கு நிருவாக அனுமதி செயல்பாட்டில் உள்ளது என்றும், அது விரைவில் வழங்கப்படும் என்றும் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

19 முக்கிய ரயில்வே திட்டங்களுக்கு நில எடுப்பு செய்யப்பட வேண்டிய 1273.05.15 ஹெக்டேர் பரப்புள்ள நிலங்களில், 1198.02.34 ஹெக்டேர் பரப்புள்ள நிலங்கள், அதாவது 94 விழுக்காடு நிலங்களைக் கையகப்படுத்தும் பணிகள் முடிக்கப்பட்டு, அவை ரயில்வே துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும், இருப்பினும், ஐந்து திட்டங்களுக்கு ரயில்வே துறையால் நிலத் திட்ட அட்டவணை (LPS) இன்னும் வழங்கப்படவில்லை என்றும் தனது கடிதத்தில் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வரும் முக்கியத் திட்டங்களான திண்டிவனம்-நகரி அகல இரயில் பாதை, மதுரை-தூத்துக்குடி அகல இரயில் பாதை, மணியாச்சி-நாகர்கோவில்அகலஇரயில்பாதை, கன்னியாகுமரி-நாகர்கோவில் அகல இரயில் பாதை இரட்டிப்பாக்குதல், நாகர்கோவில்-இரணியல் அகல இரயில் பாதை இரட்டிப்பாக்குதல், தூத்துக்குடி-மதுரை (அருப்புக்கோட்டை வழி) புதிய அகல இரயில் பாதை (கட்டம்-I), சின்ன சேலம்-கள்ளக்குறிச்சி புதிய அகல இரயில் பாதை, மயிலாடுதுறை-திருவாரூர் அகல இரயில் பாதை, பட்டுக்கோட்டை நான்கு முனை சந்திப்பு, புதிய அகல இரயில் பாதை (சேலம்-கரூர் வழித்தடம் உருவாக்குதல்), மன்னார்குடி-நீடாமங்கலம் அகல ரயில் பாதை, சென்னை கடற்கரை-கொருக்குப்பேட்டை மூன்றாவது, நான்காவது வழித்தடம் மற்றும் விழுப்புரம்-திண்டுக்கல் அகல இரயில் பாதை ஆகிய திட்டங்களுக்கு நிலம் கையகப்படுத்தும் பணிகள் முழுமையாக நிறைவடைந்துள்ளன என்றும், மேலும், மீதமுள்ள திட்டங்களுக்கான நிலம் கையகப்படுத்தும் பணிகள் விரைவாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் முதல்வர் தனது கடிதத்தில் கோடிட்டுக் காட்டியுள்ளார். தமிழ்நாடு அரசு, ரயில்வே திட்டங்களுக்கு உயரிய முன்னுரிமை அளித்து, வலுவானதொரு கண்காணிப்பு வழிமுறையினை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவித்துள்ள முதல்வர்,திட்டங்களைச் செயல்படுத்துவதில் உள்ள சிக்கல்களைத் தீர்க்கவும், நிலுவையில் உள்ள திட்டங்களுக்கு நிலம் கையகப்படுத்துவதை விரைவுபடுத்தவும், தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளரும், போக்குவரத்துத் துறை செயலாளரும் ரயில்வே அதிகாரிகளுடன் தொடர்ந்து மாதாந்திர ஒருங்கிணைப்பு கூட்டங்களை நடத்தி வருவதாகதனது கடிதத்தில் குறிப்பிட்டு ள்ளார்.

தமிழ்நாடு, தேசிய மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் ஏற்றுமதிக்குத்தொடர்ந்து கணிசமான பங்களிப்பை வழங்கி வருகிறது என்றும், மேம்பட்ட ரயில் இணைப்பு மற்றும் உள்கட்டமைப்பு மூலம் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தை மேலும் வலுப்படுத்தும் மகத்தான ஆற்றலை தமிழ்நாடு கொண்டுள்ளதாகவும் தனது கடிதத்தில் கோடிட்டுக் காட்டியுள்ளார். மேற்கூறியவற்றைக் கருத்தில் கொண்டு, நில எடுப்பு மற்றும் இழப்பீடு வழங்குவதை விரைவுபடுத்திட ஏதுவாக, அனுமதிக்கப்பட்ட திட்டங்களுக்குத் தேவையான நிதியை தாமதமின்றி, முழுமையாக, முன்னுரிமை அடிப்படையில் விடுவிக்கவும்;

ரயில்வே துறையால் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள முக்கியமான திட்டங்களான தூத்துக்குடி-மதுரை (அருப்புக்கோட்டை வழியாக) புதிய அகலப் பாதை மற்றும் திண்டிவனம்-திருவண்ணாமலை அகலப் பாதை (ஏற்கெனவே 931.52.96 ஹெக்டேர் நிலத்தைக் கையகப்படுத்த நிருவாக அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளன) திட்டங்களை மீண்டும் தொடங்கிடவும், இதற்குத் தேவையான நிதியினை வழங்கிடவும்;

தமிழ்நாட்டின் பொருளாதார நிலை மற்றும் வளர்ச்சித் தேவைகளுக்கு ஏற்ப, கூடுதலாக புதிய இரயில் திட்டங்களை அனுமதிப்பது குறித்து பரிசீலித்திடவும்;

பிரதமர் தலையிட்டு, மத்திய ரயில்வே அமைச்சகத்திற்கு உரிய அறிவுரைகளை வழங்கிட வேண்டுமென்று முதல்வர் தனது கடிதத்தில் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளார். இந்தியப் பிரதமரின் தலையீடு, கூட்டுறவுக் கூட்டாட்சித் தத்துவத்தை வலுப்படுத்துவதோடு, மத்திய மற்றும் மாநில அரசின் நலனைக் கருத்தில் கொண்டு, இந்தப் பிரச்னைகளை உடனடியாகத் தீர்க்க உதவிடும் என தமிழ்நாடு முதல்வர் தனது கடிதத்தில் நம்பிக்கை தெரிவித்துள்ளார். இந்நிலையில், ரயில்வே திட்டங்களை விரைவாக நிறைவேற்றுவதற்குத் தேவையான அனைத்து ஒத்துழைப்புகளையும் வழங்க தமிழ்நாடு அரசு முழுமையாக உறுதிபூண்டுள்ளது என்று தெரிவித்துள்ள தமிழ்நாடு முதல்வர் , இதுதொடர்பாக இந்தியப் பிரதமரிடம் இருந்து விரைவில் சாதகமான நடவடிக்கையை எதிர்பார்ப்பதாகத் தெரிவித்துள்ளார்.

# குரூப்2 முதன்மைத்தேர்வில் நடைபெற்ற குளறுபடிகள்

## எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி கடும் கண்டனம்



குரூப்-2 முதன்மைத் தேர்வில் நடைபெற்ற குளறுபடிகள் தொடர்பாக சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

உதவி ஆய்வாளர், இளநிலை வேலைவாய்ப்பு அலுவலர், வனவர் உள்ளிட்ட குரூப்-2 பதவிகளுக்கும், முதுநிலை ஆய்வாளர், உதவி ஆய்வாளர், தணிக்கை ஆய்வாளர், மேற்பார்வையாளர் உள்பட குரூப்-2ஏ பதவிகளுக்கும் என 828 காலிப்பணியிடங்களுக்கான முதன்மைத் தேர்வு இன்று (பிப்.8) காலை நடைபெறவிருந்தது. தமிழகம் முழுவதும் 38 மையங்களில் தேர்வுகள் நடைபெறவிருந்த நிலையில், பல்வேறு குளறுபடிகளால் குரூப் 2, 2 ஏ முதன்மைத் தேர்வுகள் தள்ளிவைக்கப்பட்டன.

இந்த நிலையில், இதுதொடர்பாக எடப்பாடி பழனிசாமி தனது எக்ஸ் பக்கத்தில் பதிவு ஒன்றையும் பதிவிட்டுள்ளார்.

அந்தப்பதிவில்,"தமிழ்நாடு முழுவதும் இன்று நடைபெறவிருந்த டிஎன்பிஎஸ்சி குரூப் 2, 2ஏ முதன்மைத் தேர்வானது, ஹால் டிக்கெட் மற்றும் தேர்வு மைய குளறுபடிகளால் ஒத்திவைக்கப்படுவதாக தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது. திமுக ஆட்சியில் "நிர்வாகம்" என்பது எந்த லட்சணத்தில் இருக்கிறது என்பதை, இந்த ஒரு நிகழ்வே வெளிச்சம் போட்டு காட்டிவிட்டது.

டிஎன்பிஎஸ்சி குரூப் 2, 2ஏ போன்ற அதிமுக்கியத்துவம் வாய்ந்த ஒரு தேர்வு, தேர்வு நாளன்று ஒத்திவைக்கப்படுவது தமிழ்நாட்டின் வரலாற்றிலேயே இதுவே முதல் முறை. அதுவும், பல இடங்களில் தேர்வர்கள் தேர்வு ஒத்திவைக்கப்பட்டதே தெரியாமல் தேர்வு எழுதியுள்ளனர் என்ற பேரதிர்ச்சியான செய்திகளும் வருகின்றன.

"தொழில்நுட்பக் கோளாறு-Technical Fault" என ஒற்றை வரியில் தப்பிக்க முயலுகின்ற திமுக ஆட்சியாளர்கள் , குரூப்-2 என்பது எவ்வளவு முக்கியமான தேர்வு?

அந்தக் கோளாறுக்குப் (Fault) பின்னால் தேர்வெழுதிய இளைஞர்களின் பல ஆண்டுகால உழைப்பும் நம்பிக்கையும் சிதைந்துள்ளது என்பதை மறந்துவிடாதீர்கள். தமிழ்நாட்டை "சூப்பர்ஸ்டார்" மாநிலமாக மாற்றிவிட்டதாக வாய்கிழிய மேடையில் பேசும் முதல்வர் ஸ்டாலின், ஒரு தேர்வைக்கூட உருப்படியாக நடத்த வக்கில்லாத கையாலாகாத அரசு தான் உங்கள் திமுக அரசு.

ஏற்கனவே 5.5 லட்சம் வேலைகளைத் தரப்போகிறோம் என 2021-ல் கொடுத்த தேர்தல் வாக்குறுதி எல்லாம் காற்றில் பறந்துக்கொண்டு இருக்க, இருக்கின்ற தேர்வுகளைக் கூட ஒழுங்காக நடத்த வக்கற்ற திமுக அரசுக்கு எனது கடும் கண்டனம்.

# சேலத்தில் விஜய் பிரசாரக்கூட்டத்துக்கு அனுமதி; த.வெ.க.வுக்கு நிபந்தனைகள் என்னென்ன?



சேலத்தில் தமிழக வெற்றிக்கழகத்தலைவர் விஜய் பங்கேற்கும் பிரசாரக் கூட்டத்துக்கு பல்வேறு நிபந்தனை களுடன் சேலம் மாநகர காவல் துறை அனுமதி வழங்கியுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சேலம் மாவட்டம் சீலநாயக்கன்பட்டி நெடுஞ்சாலை அருகே உள்ள தாளமுத்து நடராஜன் திடலில் கூட்டம் நடத்த அனுமதி கோரி, தவெக மத்திய மாவட்டச் செயலாளர் தமிழன் ஆ. பார்த்திபன் தலைமையில் தவெக நிர்வாகிகள், காவல் ஆணையர் அனில்குமார் கிரியிடம் கடந்த புதன்கிழமை மனு அளித்தனர்.

ஆனால், அரசு வழிகாட்டுதல்படி வழிமுறைகள் குறிப்பிடப்படவில்லை என்று தெரித்து அந்த மனு காவல் துறை சார்பில் நிராகரிக்கப்பட்டது.

முன்னதாக, சேலம் மகுடஞ்சாவடி பகுதியில் உள்ள காளிகவுண்டம்பாளையம் பகுதி திடலில் விஜய் மக்கள் சந்திப்பு கூட்டத்துக்கு அனுமதி கோரி, மகுடஞ்சாவடி காவல் நிலையத்தில் ஒன்றியச் செயலாளர் கார்த்தி கடந்த செவ்வாய்க்கிழமை இரவு மனு அளித்திருந்தார். இந்த மனு காவல் துறை பரிசீலனையில் இருந்தது.

இதனிடையே, சீலநாயக்கன்பட்டி தாளமுத்து நடராஜன் திடலில் விஜய் மக்கள் சந்திப்பு கூட்டத்தை நடத்த அனுமதி கேட்டு, சேலம் மாநகர காவல் ஆணையரிடம் தவெக நிர்வாகிகள் மீண்டும் மனு அளித்தனர்.

அந்த மனுவில், விஜய் மக்கள் சந்திப்பு கூட்டத்தில் 5 ஆயிரம் மட்டுமே கலந்துகொள்வார்கள் என்று குறிப்பிடப்பட்டு இருந்தது.

இந்தநிலையில்,சேலம் சீலநாயக்க ன்பட்டி நெடுஞ்சாலை அருகே உள்ள தாளமுத்து நடராஜன் திடலில் தவெக தலைவர் விஜய்யின் பிரசாரக் கூட்டத்தை பல்வேறு நிபந்தனைகளுடன் நடத்த, சேலம் மாநகர காவல் துறை அனுமதி வழங்கியுள்ளதாகத் தகவல் தெரியவந்துள்ளது.

5000 பேருக்கு மேல் பங்கேற்க மாட்டார்கள் என தவெகவினர் உத்தரவாதம் அளித்த நிலையில், காவல் துறையினர் அனுமதி வழங்கியுள்ளதாகக் கூறப்படுகிறது.

குழந்தைகள் மற்றும் கருவுற்றப் பெண்கள் கூட்டத்தில் பங்கேற்கக் கூடாது,அனைவருக்கும் டோக்கன் வழங்கப்பட வேண்டும் உள்ளிட்ட நிபந்தனைகளைப் பின்பற்ற வேண்டும் என்று சேலம் மாநகர காவல் துறையினர் தெரிவித்துள்ளனர்.

வரும் பிப்.13 ஆம் தேதி நடைபெறும் கூட்டத்துக்கு பகல் 12 மணி முதல் 3 மணி வரை மட்டுமே அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாகத் தகவல் தெரியவந்துள்ளது.

**செய்திகள்**

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில்

இணையுங்கள்

Join my WhatsApp group.

https://chat.whatsapp.com/

CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# கோவை புலியகுளம் பகுதியில் உதவும் பேரவை அமைப்பின் சார்பாக பொதுமக்களுக்கான இலவச கண் பரிசோதனை முகாம்

## 300க்கும் மேற்பட்டோர் பங்கேற்று கண்களை பரிசோதனை செய்தனர்



கோவை மாவட்ட பார்வை இழப்பு தடுப்பு சங்கம், கோவை சிவாஜி காலனி பகுதியில் இயங்கும், அனைத்து சமூக மக்களுக்கும் உதவும் பேரவை,மற்றும்கோவை அரவிந்த்கண்மருத்துவமனை இணைந்து நடத்தும் இலவச மாபெரும் கண் பரிசோதனை முகாம், கோவை புலியகுளம் பகுதியில் உள்ள புனித அந்தோனியார் ஆலய வளாகத்தில் நடைபெற்றது. அனைத்து சமூக மக்களுக்கும் உதவும்பேரவை அமைப்பின் சார்பாக 26 வது முறையாக நடைபெறும் இந்த, இலவச கண் பரிசோதனை சிறப்பு முகாமில், பொதுமக்களுக்கு இலவசமாக கண்புரை நோய், நீர் அழுத்த நோய், மாலைக்கண் நோய், மாறுக்கண், சீல் நீர் வடிதல், துரப்பார்வை, ஆகியவற்றிற்கான பரிசோதனைகள் இலவசமாக செய்யப்பட்டது. இந்த கண்பரிசோதனைமுகாமில் பொதுமக்கள், இந்த பகுதியை சேர்ந்தவர்கள் என சுமார் 300க்கும் மேற்பட்டொர் கலந்து கொண்டு கண் பரிசோதனை செய்து கொண்டதுடன் மருத்துவர்களிடம் ஆலோசனை பெற்றனர். விழாவுக்கான ஏற்பாடுகளை, கோவை சிவாஜி காலனி பகுதியில் செயல்பட்டு வருகின்ற, அனைத்து சமூக மக்களுக்கும் உதவும் பேரவை அமைப்பின் நிறுவன தலைவரும், சமூகஆர்வலரும்,வழக்கறிஞருமான புஸ்பாணந்தம் செய்திருந்தார். இந்த கண் சிகிச்சை முகாமில், தோழர் மாணிக்கம், அனைத்து கிறித்துவ மக்கள் ஒருங்கிணைப்பு நல மைய நிறுவன தலைவர், ஸ்டீபன் ராஜ், புனித அந்தோனியார் ஆலயத்தின் உதவி பங்கு தந்தை பால் ராஜ், இந்திரன் இதழ் ஆசிரியர் உலகநாதன், லட்சுமி, திவ்யா, பால்ராஜ், வழக்கறிஞர் குமாஸ்தா ஜான், போத்தனூர் தெய்வானை, புவனேஸ்வரி, பாப்பாத்தி, சுபஸ்ரீ, உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஊத்தங்கரையில் ரூ.86 லட்சம் மதிப்பிலான வளர்ச்சித்திட்டங்கள் அ.தி.மு.க. எம்.எல்.ஏ. தமிழ்செல்வம் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வந்தார்



கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை எம் எல் ஏ தொகுதிக்குட்பட்ட பகுதிகளில், பொதுமக்களின்நீண்டகாலகோரிக்கைகளை நிறைவேற்றும் வகையில், எம் எல் ஏ தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து சுமார் 86 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு மக்கள் நலத்திட்டப் பணிகளை ஊத்தங்கரை அதிமுக எம் எல் ஏ தமிழ்செல்வம் திறந்து வைத்தார். அரசு விளையாட்டு மைதானத்தில் 56 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் இறகுப்பந்து உள்விளையாட்டு அரங்கம் நவீன முறையில் அமைக்கப்பட்டஇறகுப்பந்துமைதானத்தை எம்.எல்.ஏ குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார்.

விளையாட்டு வீரர்களுடன் எம்.எல்.ஏ தமிழ்செல்வம் சிறிது நேரம் இறகுப்பந்து விளையாடி அவர்களை உற்சாகப்படுத்தினார். தொடர்ந்து

ஊத்தங்கரை எம்எல்ஏ அலுவலகத்திற்கு எதிரே அரசுப் பள்ளி மாணவர்கள் மற்றும் அப்பகுதி மக்கள் பயன்பெறும் வ கையில் 10 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் மையம் அமைக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வந்தார். பாரதிபுரம் பகுதியிலேயே 10 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய சுத்திகரி க்கப்பட்ட குடிநீர் மையத்தை பயன்பாட்டிற்கு கொண்டு வந்தார். ஊத்தங்கரை இந்திரா நகர் மாரியம்மன் கோயில் அருகே புதிய ரேஷன் கடை 10 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டது. அதனையும் ரிப்பன் வெட்டி திறந்து வைத்த எம்.எல்.ஏ, பொதுமக்களுக்கு அரிசி, சர்க்கரை, பருப்பு மற்றும்எண்ணெய் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை வழங்கி விற்பனையைத் தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில் ஊத்தங்கரை நகர செயலாளர் சிக்னல் ஆறுமுகம் தலைமையில் நடைபெற்றஇந்தவிழாக்களில், மாவட்டத் துணைச் செயலாளர் சாகுல் அமீது, மத்திய ஒன்றிய செயலாளர் திருஞானம், வடக்கு ஒன்றிய செயலாளர் வேடி, தெற்கு ஒன்றிய செயலாளர் வேங்கன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மருத்துவர் அணி மாவட்ட செயலாளர் இளையராஜா, மாவட்ட சிறுபான்மை பிரிவு துணைச் செயலாளர் பியாரேஜான்,முன்னாள் நகர செயலாளர் சிவானந்தம்,முன்னாள் சேர்மன் கிருஷ்ணன், துணை சேர்மன் சுப்பிரமணி, முன்னாள் பேரூராட்சி துணைத் தலைவர் சின்னத்தம்பி, இலக்கிய அணி மாவட்ட துணை செயலாளர்1 மணி, உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய மற்றும் கிளைக் கழக நிர்வாகிகள், பொதுமக்கள் திரளாகக் கலந்துகொண்டனர்.

## மதுராந்தகம் அருகே

# ஸ்ரீ சந்தைவெளியம்மன் கோவில் கும்பாபிஷேக விழா



செங்கல்பட்டு மாவட்டம்,மதுராந்தகம் அருகே உள்ள பெரிய வெளிக்காடு கிராமத்தில் எழுந்தருளிகரும் ஸ்ரீ சந்தைவெளியம்மன். கங்கையம்மன் செம்பவள விநாயகர் ஆலயம் உள்ளிட்ட திருக்கோவில்களுக்கு மஹா கும்பாபிஷேக

விழாகோலாகலமாகவும் வெகு விமர்சையாகவும் நடந்தது. கடந்த 5 ஆம் தேதி யாகசாலை அமைத்துக் கணபதி பூஜை, வாஸ்து சாந்தி,மஹாபூர்ணஹுதி உள்ளிட்ட பூஜைகளுடன் விழா தொடங்கப்பட்டு, யாககால பூஜைகள், மஹா ஹோமம், கோ பூஜை உள்ளிட்ட பல்வேறு பூஜைகள் நடத்தப்பட்டது. நான்கு நாட்கள் பூஜைகள் நடந்தன

தொடர்ந்து இன்று காலை 10.30.மணிக்கு நான்காம் கால பூஜைகள் அதன்பின் கலசங்கள் புறப்பாடு நடத்தப்பட்டு மஹா கும்பாபிஷேகம் புனித நீர் கலசங்களுக்கு உற்றப்பட்டு மஹா கும்பாபிஷேகம் நடந்தது. ஸ்ரீ சந்தைவெளி அம்மனுக்கு சிறப்பு பூஜை தீப அதாரணை நடைபற்றது விழாவில் திரளான பக்தர்கள் கலந்துக்கொண்டு ஸ்ரீ சந்தவெளி அம்மன் தரிசித்து விட்டு சென்ற. அனைவருக்கும் .அன்னதாம் வழங்கப்பட்டது



ஆலங்குளம் சட்டமன்றம் குறிப்பன்குளம் பாஜக சக்தி கேந்திர பொறுப்பாளர்கள்வேலாயுதம் மற்றும் முத்து சிவன்ஆகியோர் ஏற்பாட்டில் சந்திப்பு நிகழ்ச்சி நடந்ததுஅந்தப் பகுதியில் முன்னாள் ஒன்றிய தலைவர் மற்றும் பாப்பாக்குடி ஒன்றிய பார்வையாளர் அண்ணாச்சி பண்டரிநாதன் அவர்கள் முன்னிலையில்ஆலங்குளம் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் அருணாசலம் அவர்கள் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு பாரத பிரதமர் நரேந்திர மோடிஜி அவர்கள் திட்டமான ஆயுள் காப்பீட்டு அட்டையை பொதுமக்களுக்கு வழங்கினார் நிகழ்ச்சியில் குறிப்பன்குளம் பஞ்சாயத்து தலைவர் சுப்பிரமணியன் அவர்கள் ஒன்றிய பொருளாளர் விஜயன், குறிப்பன்குளம் பாண்டியன், நாரணபுரம் இன்பராஜ் கிளை தலைவர் புஷ்பராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்

# கல்லூரி மாணவரை தாக்கி நகை பறிப்பு; பா.ஜ.க. பிரமுகர் உட்பட இருவர் கைது





நகைவியாபாரம்செய்யலாம் என அழைத்துச் சென்று கல்லூரி மாணவரை தாக்கி நகை பறித்த வழக்கில்இரண்டுபேரை போலீசார் கைது செய்தனர். பொள்ளாச்சி அருகே ஊஞ்சவேலம் பெட்டியைச் சேர்ந்தவர் மகேஸ்வரன், இவருடைய மகன் அபினேஷ். இவர் கோவை அருகே உள்ள ஒரு கல்லூரியில் இன்ஜினியரிங் 4 ம் ஆண்டு படித்து வருகிறார்.

இவருக்கும் போடிநாயக்கன்பாளையத்தைச் சேர்ந்த சர்வேஷ், தேனியை சேர்ந்த கரண் ராஜ், ஒட்டன்சத்திரத்தைச் சேர்ந்த பாலாஜி ஆகியோருக்கும் இடையே பழக்கம் ஏற்பட்டது.அவர்கள் மூன்று பேரும் அபினேஷிடம் பகுதி நேர வேலையாக தங்கவியாபாரம் செய்யலாம் என்றும் கூறி உள்ளனர்.

இதைத் தொடர்ந்து மூன்று பேரும் சேர்ந்து அபினேஷிடம் தங்களுக்கு தெரிந்த நபர் ஒருவர் தங்கத்தை பாதி விலைக்கு கொடுப்பதாக கூறி உள்ளனர். அதை வாங்கி நாம் கூடுதல் விலைக்கு விற்கலாம் என்று கூறி எட்டிமடை அருகே வருமாறு அழைத்து உள்ளனர்.

அதை நம்பிய அபினேஷும் எட்டிமடை அருகே சென்றார். அப்பொழுது ஒரு காரில் சர்வேஷ், கரண்ராஜ், பாலாஜி உட்பட ஐந்து பேர் வந்தனர். அவர்கள் அபினேசை மாவுத்தம்பதி அருகே காட்டுப் பகுதிக்குள் காரில் கடத்திச் சென்றனர். அங்கு சென்றதும், ஐந்து பேர் சேர்ந்து திடீரென அபினேஷ் சாரா மாறியாகதாக்கிஇரண்டு பவுன் செயின், செல்போன் ஆகியவற்றை பறித்து விட்டு தப்பிச் சென்றனர். இது குறித்து புகாரின் பேரில் கந்தே கவுண்டன்சாவடிபோலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தினார். இதை அடுத்து தேனியில் பதுங்கி இருந்த சர்வேச போலீஸ் பிடித்து கோவைக்கு அழைத்து வந்து விசாரித்தனர். அவர் கொடுத்த தகவலின் பெயரில் கோவை ஆர்.எஸ்புரம் பகுதியைச் சேர்ந்த கார் வியாபாரியும், பா.ஜ.க பிரமுகரமான விவேக் என்பவரை போலீசார் பிடித்து விசாரணை நடத்தினர். இதில் சர்வேஷ், விவேக் உட்பட ஆறு பேர் சேர்ந்து இந்த சம்பவத்தில் ஈடுபட்டது தெரியவந்தது. இதை அடுத்து காவல் துறையினர் விவேக் உட்பட இரண்டு பேரையும் கைது செய்து இந்த வழக்கில் தலைமறைவாக உள்ள 4 பேரை போலீசார் தொலைபேசி தேடி வருகின்றனர்.

# ஈரோடு மாநகராட்சியில் ஓட்டுநர் மற்றும் துலக்குநர் சங்கத்தின் 30ஆம் ஆண்டு நிறைவு விழா

## பழைய ஓய்வூதியத்திட்டம் உள்ளிட்ட 12 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி மாநாடு



தமிழ்நாடு நகராட்சி மாநகராட்சி ஓட்டுநர் மற்றும் துலக்குநர் சங்கத்தின் (அரசு அங்கீகாரம் பெற்றது) 30-ஆம் ஆண்டு நிறைவு விழா, புதிய நிர்வாகிகள் தேர்வு மற்றும் கோரிக்கை மாநாடு ஈரோடு பேருந்து நிலையம் அருகில் உள்ள மாநகராட்சிதிருமணமண்டபத்தில் எழுச்சியுடன் நடைபெற்றது. விழாக்குழுவினர் பஷீர் அகமது மற்றும் மோகன் ஆகியோர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், சங்கத்தின் கொடியேற்றத்துடன் மாநாட்டு விவாதங்கள் தொடங்கின. இதில் சிறப்பு அழைப்பாளர்களாக நகராட்சி மாநகராட்சி அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் சங்க மாநிலத் தலைவர் கா.முருகானந்தம் மற்றும் தமிழ்நாடு அரசு ஊர்தி ஓட்டுநர் சங்க மாநிலத் தலைவர் பா.பச்சையப்பன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினர். பல்வேறு மண்டலங்களைச் சேர்ந்த நிர்வாகிகள் மற்றும் ஓட்டுநர்கள் பெருந்திரளாகக் கலந்துகொண்ட இம்மாநாட்டில், சங்கத்தின் புதிய நிர்வாகிகள் ஒருமனதாகத் தேர்வு செய்யப்பட்டனர்.

மாநாட்டின் முக்கிய நிகழ்வாக,தமிழகஅரசின் கவனத்தை ஈர்க்கும் வகையில் 12 முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. குறிப்பாக,புதிய ஓய்வூதியத் திட்டத்தை ரத்து செய்து மீண்டும் பழைய ஓய்வூதியத் திட்டத்தை அமல்படுத்த வேண்டும், அரசாணை எண் 10 மற்றும் 152-ஐ தளர்வு செய்து குறைக்கப்பட்ட ஓட்டுநர் பணியிடங்களை மீண்டும் தோற்றுவிக்க வேண்டும் மற்றும் தொகுப்பூதியத்தில் பணியாற்றும் ஓட்டுநர்களின் பணிகளை வரன்முறைப்படுத்த வேண்டும் ஆகிய கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

மேலும், புதிய வாகனங்கள் கொள்முதல் செய்யும்போதே ஓட்டுநர் பணியிடங்களையும் உருவாக்க வேண்டும்,ஜேசிபி இயந்திரம் இயக்கப் பயிற்சி பெற்ற ஓட்டுநர்களுக்கு அதற்கான பணியிடங்களை வழங்க வேண்டும், கல்வித் தகுதிக்கேற்ப பதவி உயர்வு மற்றும் பணி மாற்றம் வழங்க வேண்டும் போன்ற கோரிக்கைகளும் வலியுறுத்தப்பட்டன.ஓட்டுநர்களுக்குச் சீருடை, காலணி, மழைகோட் உள்ளிட்ட வசதிகளை அரசு ஓட்டுநர்களுக்கு இணைய வழங்க வேண்டும் என்றும், உடல்நலம் பாதிக்கப்பட்ட ஓட்டுநர்களுக்கு மாற்றுப் பணி வழங்க வேண்டும்என்றும்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பணியின் போது உயிரிழந்த ஓட்டுநர்களின் வாரிசுகளுக்கு கல்வித் தகுதியைப் பொருட்படுத்தாமல் கருணை அடிப்படையில்வேலை வழங்க வேண்டும் மற்றும் ஊதியத்தில் பிடித்தம் செய்யப்படும் சேமநல நிதி முறையாகக் கருவூலத்தில் செலுத்தப்படுவதை உறுதி செய்ய வேண்டும் என மாநாட்டில் கேட்டுக்கொள்ளப்பட்டது.

இறுதியாக, அரசு ஆணை எண் 237-ன் படி ஓட்டுநர்களுக்குத் தரஊதிய உயர்வு(Grade Pay) நிர்ணயம் செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை நகராட்சி நிர்வாக இயக்குநர் மூலமாக அரசுக்குச் சமர்ப்பிக்க முடிவெடுக்கப்பட்டது. இந்த மாநாடு ஓட்டுநர்களின் வாழ்வாதார உரிமைகளை மீட்டெடுக்கும் ஒரு முக்கிய மைல்கல்லாக அமைந்தது.

# டிஎன்பிஎஸ்சி தேர்வர்களின் கனவு நசுக்கப்பட்டு கொண்டிருக்கிறது; தமிழிசை சௌந்தரராஜன் பேச்சு



டிஎன்பிஎஸ்சி தேர்வர்களின் கனவு நசுக்கப்பட்டு கொண்டிருக்கிறது என்று தமிழக பாஜக முன்னாள் தலைவர் தமிழிசைசௌந்தரராஜன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில், திமுகமாடல்அரசாங்கம் முற்றிலும்நிர்வாக சீர்கேட்டினால் நிலை குலைந்து போயிருக்கிறது என்பதற்கு இந்த நிகழ்வு ஒரு உதாரணம்... 9000 டிஎன்பிஎஸ்சி தேர்வர்களின் கனவு இங்கே நசுக்கப்பட்டு கொண்டிருக்கிறது... இளைஞர்களின் வாழ்க்கை நசுக்கி விட்டு இளைஞர்அணி மாநாடு நடத்துவது தான் திமுகவின் அரசியல் நாடகம்..

பல இடங்களில் சென்டர் ஒதுக்கப்படாமல் போராடிக் கொண்டிருக்கின்ற நேரத்தில்சில இடங்களில் தேர்வு எழுத ஆரம்பித்து விட்டார்கள்.. இந்த குளறுபடி இந்தஆட்சியின் குழப்பத்தின் உச்சக்கட்டம்.. வாழ்க்கைப் போராட்டமாக இருக்கும் இந்த இந்த இளைஞர்கள்.. விடிவு காலம் வேண்டும் என்று கடுமையாக தயாரித்து...

தேர்வுக்கு வந்தால்.. தேர்வு எழுதுவதே போராட்டமாக போராட்டமாக வெடித்திருப்பதுவேதனையிலும் வேதனை அரசு உடனே இதற்கு நடவடிக்கை தேவை... ஆயிரக்கணக்கானோர் தங்கள் நேரத்தையும் பொருளையும் செலவிட்டு.. ஆர்வமுடன் வந்தவர்கள் அலை கழிக்கப்பட்டிருக்கிறார்கள்...

நியாயமாக சரியான திட்டமிடலுடன் தேர்வுகள் நடைபெற வேண்டும் என்பதில் அரசு கவனம் செலுத்த வேண்டும்.. மறுபடியும் தேர்வு அறிவிக்கப்படும்பொழுது எந்த குளறுபடியும் இல்லாமல் பார்த்துக் கொள்வது அரசாங்கத்தின் கடமை...இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

# ஈரோடு மாநகராட்சி விளையாட்டு விழா: கபடி, கால்பந்து மைதானத்தில் அதிரடி காட்டிய ஆணையாளர் ஊழியர்களுக்கு விடுக்கப்பட்ட முக்கிய உத்தரவு



ஈரோடு மாநகராட்சி பணியாளர்களின் மன அழுத்தத்தைக் குறைக்கவும் உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்தவும் முதலாம் ஆண்டு விளையாட்டு விழா வ.உ.சி பூங்கா மைதானத்தில் மிக உற்சாகமாக நடைபெற்றது. இந்த விழாவில் 100 மீட்டர் ஓட்டப்பந்தயம், கபடி மற்றும் கால்பந்து உள்ளிட்ட பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்ட நிலையில், மாநகராட்சி அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் பெருந்திரளாகக் கலந்துகொண்டனர். விழாவின் சிறப்பம்சமாக ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் அனைத்துப் போட்டிகளிலும் ஒரு வீரராகவே மாறி ஆர்வத்துடன் பங்கேற்றார். குறிப்பாக கால்பந்து மற்றும் கபடி போட்டிகளில் அவர் நேரடியாகக் களமிறங்கி சக ஊழியர்களுடன் இணைந்து ஆக்ரோஷமாக விளையாடியது அங்கிருந்த அனைவரது கவனத்தையும் ஈர்த்துடன் மைதானத்தில் பெரும் உற்சாகத்தை ஏற்படுத்தியது. இதனைத் தொடர்ந்து போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

ஈரோடு கிழக்கு சட்டமன்றஉறுப்பினர்சந்திரகுமார் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில்,வெற்றி பெற்ற அதிகாரிகள் மற்றும் பணியாளர்களுக்கு முதல் மூன்று இடங்களுக்கான பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. நிகழ்ச்சியில் உரையாற்றியமாநகராட்சிஆணையாளர், விளையாட்டுகளில் ஈடுபடுவதன் மூலம் உடல் மற்றும் மனம் வலிமை பெறும் என்றும், பணிச்சுமையால் ஏற்படும் அழுத்தத்தைக் குறைக்க இது போன்ற நிகழ்வுகள் அவசியம் என்றும் குறிப்பிட்டார். மேலும் ஒரு முக்கிய அறிவிப்பாக, ஞாயிற்றுக்கிழமை விடுமுறை விளையாட்டுக்காகச் செலவிட்டாலும், திங்கட்கிழமை அனைவரும் எவ்வித விடுப்பும் எடுக்காமல் கட்டாயம் பணிக்குத் திரும்பி மக்கள் பணியைத் தொய்வின்றிச் செய்ய வேண்டும் என அன்பான கட்டளையையும் பிறப்பித்தார். இந்த விளையாட்டுவிழாமாநகராட்சி ஊழியர்களிடையே மிகுந்த நெகிழ்ச்சியையும் புத்துணர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது. மேலும் இந்த பரிசளிப்பு விழாவில் ஈரோடு கிழக்குசட்டமன்றஉறுப்பினர் வி.சி.சந்திரகுமார், மாவட்ட துணை ஆட்சியர் (பயிற்சி) காஞ்சன் சவுத்ரி, துணை மேயர் செல்வராஜ், திமுக மாநகரச் செயலாளர் சுப்பிரமணியம், மண்டல தலைவர் காட்டு சுப்பு (எ) மு.ப.சுப்ரமணியம், மாமன்ற உறுப்பினர்கள் ஆ.ஜெகதீசன், பழனியப்பா செந்தில்குமார் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



ஈரோடு மாவட்டம் தாளவாடி அருகே ஆசனூரில் உள்ள அருள்மிகு கும்பேஸ்வரசுவாமி கோவிலில் ஆண்டுதோறும் நடைபெறும் தேர் திருவிழா மாலை அலங்கார பூஜையுடன் தொடங்கியது. நள்ளிரவில் பால்குடம் எடுத்து பக்தர்கள் கோவிலுக்கு வந்தனர். பின்னர் சிறப்பு அபிஷேகங்கள் மற்றும் பூஜைகள் நடைபெற்றன. மதியம் 3 மணியளவில் அலங்கரிக்கப்பட்ட தேரில் கும்பேஸ்வரசுவாமி எழுந்தருளி வீதி உலா வந்தார். பக்தர்கள் தேங்காய், பழம் உடைத்து வழிபட்டனர். மாலை 5 மணியளவில் தேர் கோவிலை வந்தடைந்தது.இவ்விழாவில் ஆசனூர், ஒங்கல்வாடி, அரேபாளையம், மாவள்ளம், தேவர்நத்தம், கேர்மாளம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். இவ்விழாவில் கலந்து கொண்ட பக்தர்கள் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.

# ஈரோடு மாநகராட்சி சார்பில் விளையாட்டு விழா: மல்லர் கம்ப சாகசங்கள் மற்றும் பாரம்பரிய விளையாட்டு விழிப்புணர்வு; யான் அறக்கட்டளைக்கு மனமார்ந்த நன்றி



ஈரோடு:

ஈரோடு மாநகராட்சி சார்பில் அதிகாரிகள் மற்றும் ஊழியர்களுக்கான முதலாம் ஆண்டு விளையாட்டுப் போட்டி விழா வ.உ.சி பூங்கா மைதானத்தில் மாநகராட்சி ஆணையாளர் அர்பித் ஜெயின் ஐஏஎஸ்., தலைமையில் வெகு விமர்சையாக நடைபெற்றது. மட்டைப்பந்து, கால்பந்து, கபடி, குண்டு எறிதல், நீளம் தாண்டுதல், கேரம் மற்றும் 100, 200 மீட்டர் ஓட்டப்பந்தயம் எனப் பல்வேறு போட்டிகளில் மாநகராட்சி அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் உற்சாகத்துடன் பங்கேற்றனர்.போட்டிகளின் நிறைவாக நடைபெற்ற பரிசளிப்பு விழாவிற்கு முன்னதாக நடைபெற்ற மல்லர் கம்ப விளையாட்டு சாகசங்கள் அனைவரையும் வியப்பில் ஆழ்த்தின. சிறுவர் மற்றும் சிறுமிகள் தங்கள் உடலை ரப்பர் போல வளைத்து மல்லர் கம்பத்தில் செய்த சாகசங்கள் பார்வையாளர்களின்பலத்தகைதட்டலைப் பெற்றன.

இந்த விழாவில் சிறப்பு அழைப்பாளர்களாக ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி. சந்திரகுமார், மாவட்ட உதவி ஆட்சியர் (பயிற்சி) காஞ்சன் சவுத்ரி,மாவட்ட விளையாட்டு அதிகாரி சதீஷ்குமார்,திமுக மாநகரச் செயலாளர் சுப்பிரமணியம், துணை மேயர் செல்வராஜ், மண்டலதலைவர் காட்டு சுப்பு என்கிற மு. சுப்பிரமணியம்,மாமன்ற உறுப்பினர்கள் ஆ.ஜெகதீசன், பழனியப்பா செந்தில்குமார் ஆகியோர் கலந்துகொண்டு மல்லர் கம்ப வீரர்களின் திறமையைப் பாராட்டி நினைவுப் பரிசுகளை வழங்கினர்.

நிகழ்ச்சியின் இடையே ஈரோடு மல்லர் கம்ப விளையாட்டு செயலாளர் கீதா பேசுகையில், பாரம்பரியமிக்க இந்த வீர விளையாட்டை அரசு மற்றும் தனியார் பள்ளி மாணவர்களிடம் கொண்டு சேர்க்கப் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தி வருவதாகத் தெரிவித்தார்.

குறிப்பாக, இந்த விளையாட்டிற்குத் தேவையான மல்லர் கம்பம், தரை விரிப்புகள் உள்ளிட்ட அத்தியாவசிய உபகரணங்களை வழங்கி, வீரர்களை மென்மேலும் ஊக்கப்படுத்தி வரும் "யான் அறக்கட்டளைக்கு தனது மனமார்ந்த நன்றிகளை மிகவும் அழுத்தமாகப் பதிவு செய்தார். யான் அறக்கட்டளையின் இத்தகைய தொடர் ஆதரவால் தான் பாரம்பரிய மல்லர் கம்ப விளையாட்டு தற்போது ஈரோடு மாவட்டத்தின் பல்வேறு பள்ளி மாணவர்களிடையே பெரும் வரவேற்பையும் ஊக்கத்தையும் பெற்று வருவதாக அவர் நெகிழ்ச்சியுடன் குறிப்பிட்டார்.

# ஈரோடு மாவட்டத்தில் இணைய பாதுகாப்பு விழிப்புணர்வு பயிலரங்கம் 10ந் தேதி நடைபெறுகிறது

## மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தகவல்



பாதுகாப்பான இணைய பயன்பாடு மற்றும் இணைய குற்றங்களைத் தடுக்கும் நோக்கில், Information Security Education and Awareness (ISEA) திட்டத்தின் கீழ், "பாதுகாப்பான இணைய தினம் 2026" (Safe Internet Day 2026) மாவட்ட ஆட்சியரகத்தில் இணைய பாதுகாப்பு விழிப்புணர்வு பயிலரங்கம் நடைபெற உள்ளது.இவ்விழிப்புணர்வு பயிலரங்கம் கீழ்க்கண்ட விவரங்களின்படி நடைபெறுகிறது. இவ்விழிப்புணர்வு பயிலரங்கம் 10.02.2026 (செவ்வாய்க்கிழமை) காலை 10.30 மணிக்கு, ஈரோடு மாவட்ட ஆட்சியரகத்தின் பழைய கட்டிடத்தில் அமைந்துள்ள 4-வது மாடி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கூட்டரங்கில் நடைபெறுகிறது. இந்த பயிலரங்கிற்கு மாவட்ட ஆட்சித்தலைவர்ச.கந்தசாமிதலைமை தாங்கி விழாவை சிறப்பிக்க வுள்ளனர். தேன்மொழி, அவர்கள் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) வரவேற்புரை வழங்கவுள்ளனர். இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் ச. சாந்த குமார் அவர்கள் சிறப்புரை ஆற்றவுள்ளனர். மேலும், ஈரோடு மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளர் (சைபர் குற்றப் பிரிவு) சி.வேலுமணி, சிறப்புரையாற்றி இணைய குற்றங்கள் தொடர்பான விழிப்புணர்வை வழங்கவுள்ளனர். மேலும், புதிய இணைய அச்சுறுத்தல்கள், அலுவலகங்களில் கடைப்பிடிக்க வேண்டிய இணைய பாதுகாப்பு நடைமுறைகள், தரவு தனியுரிமை மற்றும் பாதுகாப்பு சட்டம் 2023, மற்றும் இணைய குற்றங்கள் தொடர்பான புகார்கள் அளிக்கும் நடைமுறைகள் குறித்து விரிவான விளக்க உரை வழங்கவுள்ளனர். இந்த பயிலரங்கத்தின் ஒரு பகுதியாக பொறுப்பான டிஜிட்டல் குடிமகன் உறுதிமொழி எடுக்கப்படுவதுடன், பயிலரங்கில் பங்கேற்கும் அலுவலர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் இலவச ஆன்டிவைரஸ் மென்பொருள் கருவிகள் வழங்கப்படவுள்ளன.

மேலும்,மாவட்ட ஆட்சியரகத்திற்குட்பட்ட அலுவலர்கள் அனைவரும் இப்பயிலரங்கில் கலந்து கொண்டு, பாதுகாப்பான இணைய பயன்பாடு தொடர்பான அறிவை மேம்படுத்திக் கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தெரிவித்துள்ளார்.

# சென்னையில் கடும் பனிமூட்டம் திருப்பி விடப்பட்ட விமானங்கள்!

சென்னையில் கடும் பனிமூட்டம் நிலவுவதால், சென்னைக்கு வந்த விமானங்கள் திருச்சி, கோவைக்கு திருப்பி விடப்பட்டுள்ளன.



சென்னையில்(பிப். 8) அதிகாலை முதல் கடுமையான பனிப்பொழிவு காணப்படுகிறது. இதனால், விமானங்கள் தரையிறங்க முடியாததால் திருப்பி விடப்பட்டுள்ளன.

சென்னை உள்பட தமிழகம் முழுவதும் கடந்த சில நாள்களாக கடுமையான பனிப்பொழிவு நிலவி வருகிறது.

இந்நிலையில்,கோவை மற்றும் பெங்களூர் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து சென்னைக்கு வந்த விமானங்கள் தரையிறங்க முடியாமல் மீண்டும் அந்தந்த ஊர்களுக்கு திருப்பி விடப்பட்டுள்ளன.

கோலாலம்பூர்,ஹைதராபாத்தில் இருந்து சென்னை வந்த விமானம் திருச்சிக்கு திருப்பி அனுப்பப்பட்டது.

சென்னையிலிருந்து பெரும்பாலான விமானங்கள் தாமதமாக புறப்பட்டுச் சென்றன.

மேலும், சென்னைக்கு வரும் புறநகர் மின்சார ரயில்களும் தாமதமாக இயக்கப்படுகிறது.

திருத்தணி, அரக்கோணம், திருவள்ளூர், கும்மிடிப்பூண்டி, சூலூர்பேட்டை இருந்து சென்னைக்கு வரும் மின்சார ரயில்கள் 30 நிமிடங்கள் வரை தாமதமாக இயக்கப்படுகிறது.

# ஈரோடு நகர மதுவிலக்கு பிரிவு கஞ்சா வழக்கு குற்றவாளி மீது குண்டர் தடுப்புச்சட்டம் பதிவு



ஈரோடு ரயில் நிலைய சந்திப்பு வளாகத்தில் உள்ளபார்சல்சர்வீஸ்அருகில்சட்டவிரோதமாக கஞ்சாவைவிற்பனைக்காகவைத்திருந்தஈரோடு, கவுண்டச்சிபாளையம்,முத்தம்பாளையம், வெள்ளப்பாறையை சேர்ந்த முருகேஷன் மகன் கவின்(22)என்பவர்மீது ஈரோடு நகரமதுவிலக்கு பிரிவில் வழக்கு பதிவு செய்து, கவின் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர் செய்து சிறையில் அடைக்கப்பட்டார். மேலும் மேற்படி எதிரி கவின் மீது ஈரோடு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் A.சுஜாதா பரிந்துரையின்படி, மாவட்ட ஆட்சியர் அவர்களின் உத்தரவின் பேரில் கடந்த 05.02.2026 ம் தேதி குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் கைது செய்ய ஆணை பிறப்பிக்கப்பட்டது. அவ்வாணையின் அடிப்படையில் குற்றவாளி கோவை மத்திய சிறையில் அடைக்கப்பட்டார்.

# ஈரோடு தாலுக்கா காவல் நிலையம் கன்னகளவு வழக்கில் இரண்டு பெண்கள் உட்பட மூன்று நபர்கள் கைது, நகை மீட்பு



ஈரோடு தாலுக்கா காவல் நிலைய சரகத்திற்குட்பட்ட மூலப்பாளையத்தைச் சேர்ந்த நைஜீரியா நாட்டில் வேலை செய்து வரும் அருள்குமரன் என்பவருக்குச் சொந்தமான பூட்டியிருந்த வீட்டில் கடந்த 03.02.2026-ம் தேதி இரவு அடையாளம் தெரியாத நபர் வீட்டின் கதவை உடைத்து உள்ளே சென்று 11 ½ சவரன் தங்க நகைகளை கொள்ளையடித்து சென்று விட்டதாக அருள்குமரனின் மனைவி ஹேமா கொடுத்தபுகாரின்பேரில் ஈரோடு தாலுக்கா காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட வழக்கு சம்மந்தமாக தாலுக்கா காவல் நிலைய ஆய்வாளர் திரு.சரவணன் தலைமையில் தனிப்படை அமைக்கப்பட்டு, விசாரணை செய்யப்பட்டு வந்த நிலையில், அருள்குமரனின் வீட்டிற்கு அருகில் உள்ள வீட்டிற்கு பெயிண்ட் அடிக்கும் வேலைக்கு வந்து கொண்டிருந்த பழங்குற்றவாளியான கோபிசெட்டிபாளையம், அக்கரை கொடிவேரி, கணக்குப்பிள்ளை வீதியைச் சேர்ந்த செல்வராஜ் (லேட்) மகன் நவீன் (எ) நவீன்குமார் (31) என்பவரை சந்தேகத்தின் பேரில் நிலையம் அழைத்து வந்து விசாரித்தபோது மேற்படி வீட்டை உடைத்து நகைகளை கொள்ளையடித்ததை ஒப்புக் கொண்டதாகவும், மேலும் கொள்ளையடித்த நகைகளை ஈரோடு, மூலப்பாளையம், பழைய நீதிபதிகள் குடியிருப்பு அருகில், மாரியம்மன் கோவில் எதிரில் வசித்து வரும் முருகேசன் (லேட்) மனைவி குப்பம்மாள் (60)என்பவரின் உதவியுடன் ஈரோடு, சாஸ்திரிநகர்,லெனின் வீதியைச் சேர்ந்த பிரபுவின் மனைவி மற்றும் குப்பம்மாளின் மருமகளான வாசுகி (22) என்பவரிடம் கொடுத்து மறைத்து வைத்துள்ளதாக கூறியதன் பேரில் மேற்கண்ட இருபெண்களையும் நிலையம் அழைத்து வந்து அவர்கள் வசமிருந்த கொள்ளையடித்த நகைகள் பறிமுதல் செய்யப்பட்டது. கொள்ளை வழக்கில்சம்மந்தப்பட்ட நவீன், குப்பம்மாள் மற்றும் வாசுகி ஆகியோர் கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலுக்கு அனுப்பப்பட உள்ளனர்.

கொள்ளை சம்பவம் நடந்து ஒருசில நாட்களிலேயே எதிரிகளை கண்டுபிடித்து நகைகளை மீட்ட காவல் ஆய்வாளர் மற்றும் குழுவினரை ஈரோடு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் A.சுஜாதா பாராட்டினார்.

# ஹஜ் யாத்திரை செல்வோர்க்கு தமிழக அரசு சார்பில் 9,10ந் தேதிக்குள் தடுப்பூசி முகாம் நடைபெறுகிறது

## மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தகவல்

ஈரோடு மாவட்டத்தில் ஹஜ் யாத்திரை மேற்கொள்பவர்களுக்கு தமிழக அரசின் சார்பில் ஈரோடு மாவட்ட தலைமை மருத்துவமனையில் மெனிங்கோகோகல் மற்றும் பருவகால இன்ஃப்ளூயன்ஸா தடுப்பூசி (Meningococcal and seasonal Influenza Vaccine) ஆகியவை செலுத்தப்பட உள்ளது. மேலும் புனித யாத்திரை மேற்கொள்பவர்களுக்கு சர்க்கரை, இரத்த அழுத்தம் மற்றும் பிற மருத்துவ பரிசோதனைகளும் மேற்கொள்ளப்படவுள்ளது.



இச்சிறப்பு முகாம் எதிர்வரும் 09.02.2026 மற்றும் 10.02.2026 ஆகிய நாட்களில் நடைபெற உள்ளது. இதில் ஈரோடு மாவட்டத்தை சேர்ந்த ஹஜ் யாத்திரை மேற்கொள்ளும் ஆண்கள் மற்றும் பெண்கள் தடுப்பூசி செலுத்திகொள்ளவுள்ளனர். 85 பயனாளிகளுக்கு தடுப்பூசி வழங்கப்பட உள்ளது. இதில் 65 வயதுக்கு மேற்பட்ட 9 நபர்களுக்கு மட்டும் பருவகால காய்ச்சல் தடுப்பூசி (Seasonal Influenza Vaccine) பிரத்தியோகமாக செலுத்தப்படும்.

# திமுக அரசின் குளறுபடியால் டிஎன்பிஎஸ்சி குரூப் 2, 2ஏ தேர்வுகள் ரத்து அண்ணாமலை கண்டனம்



திமுக அரசின் குளறுபடியால் டிஎன்பிஎஸ்சி குரூப் 2, 2 ஏ தேர்வுகள் ரத்து செய்யப்பட்டிருப்பது கண்டிக்கத்தக்கது என்று பாஜக முன்னாள் மாநிலத்தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில், இன்று நடைபெறவிருந்த டிஎன்பிஎஸ்சி குரூப்2, குரூப் 2 ஏ தேர்வுகள், தேர்வு மையங்களை அமைப்பதில் திமுக அரசு செய்த குளறுபடியால் ரத்து செய்யப்பட்டிருப்பது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. அரசுத் தேர்வுகளுக்கான அடிப்படை ஏற்பாடுகளைக் கூடச் செய்ய முடியாத கையாலாகாத நிலையில், திமுக அரசு செயல்பட்டு வருகிறது.

அரசுப் பணிகளுக்காக, பல ஆண்டு காலம் கடுமையாக தங்கள் உழைப்பைக் கொடுத்து, தேர்வு மையங்களுக்குச் சென்ற இளைஞர்களின் கனவு பறிக்கப்பட்டுள்ளது. இத்தனை ஆண்டு காலம் இல்லாத இந்தக் குளறுபடி, லஞ்சம் வாங்கிக் கொண்டு அரசுப் பணி வழங்கும் வரலாறு கொண்ட திமுக அமைச்சர்களால் நடத்தப்பட்டதா என்ற சந்தேகம் வலுவாக எழுகிறது.

லஞ்சம் ஊழல் நிறைந்த, நிர்வாகத் திறனற்ற கையாலாகாத அரசை நடத்திக் கொண்டிருக்கும் முதலமைச்சர் ஸ்டாலின், தமிழக இளைஞர்களிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும். இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

# 2026 தேர்தல் திமுகவிற்கு மிகப்பெரிய இழப்பாக அமையும் நயினார் நாகேந்திரன் பேச்சு

2026 தேர்தல் திமுகவிற்கு மிகப்பெரிய இழப்பாக அமையும் என்று பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.



சேலத்தில் செய்தியாளர்களுக்கு அவர் அளித்த பேட்டியில், உலக அளவில் இந்தியா வல்லரசு நாடாக மாறும். பொருளாதாரத்தில் முதலிடத்திற்கு வர வேண்டும். இந்தியாவை நம்பிதான் மற்ற நாடுகள் இருக்க வேண்டும் என்ற நோக்கத்தில் நரேந்திர மோடி தொலைநோக்கு பார்வையோடு செயலாற்றி வருகிறார். நாடும் நாட்டு மக்களும் நன்றாக இருக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு இரண்டு நாள்களுக்கு முன்பாக மலேசியா சென்று தமிழ் கலாச்சாரமும் பண்பாடும் 5,000 ஆண்டுகளுக்கு பழமையானது என தமிழையும் தமிழ் பெருமைகளையும் பிரதமர் பேசி உள்ளார்.

ஆனால் முதலமைச்சர் மத்திய அரசு தமிழ்நாட்டிற்கு ஒன்றுமே செய்யவில்லை, முட்டை, டப்பா என்ஜின் என பேசிக்கொண்டு உள்ளார். கடந்த ஐந்தாண்டு காலத்தில் தேர்தல் வாக்குறுதியில் சொன்ன எந்த திட்டத்தையும் ஸ்டாலின் நிறைவேற்றவில்லை. பிரதமர் நரேந்திர மோடி வருகின்ற 28ஆம் தேதி மதுரையில் தேசிய ஜனநாயக கூட்டணி பொதுக் கூட்டத்தில் பங்கேற்பதாக இருந்தது. தற்போது ஒரு நாள் தள்ளி மார்ச் 1ஆம் தேதி பங்கேற்கிறார்.

மதுராந்தகத்தில் பொதுக்கூட்டமாக நடத்த திட்டமிட்டு மாநாடாக அமைந்தது.

அந்த கூட்டம் மிகப்பெரிய உத்வேகத்தையும் எழுச்சியும் ஏற்படுத்தி உள்ளது. மக்கள் மனதில் மனமாற்றம் வந்துள்ளது. இது ஆட்சி மாற்றமாக முடியும். தேசிய ஜனநாயக கூட்டணியில் புதிய கட்சிகள் வரும். பேச்சுவார்த்தைக்கு என்று தனியாக குழு அமைக்கவில்லை. எந்தெந்த தொகுதியில் யார்? யார்? போட்டியிடுவார் என்பது குறித்து பேச்சுவார்த்தை நடைபெறும். பாஜகவிற்கு ஆதரவு தெரிவிக்கும் அமைப்புகள் குறித்து பேசுவதற்காக குழு அமைக்கப்பட்டுள்ளது.

விருதுநகர் திமுக மாநாட்டில் எம்ஜிஆர் மறைவிற்குப் பிறகு எப்படி பேசிக் கொண்டிருந்தார்களோ? தற்போது அதேபோல் பேசிக்கொண்டு உள்ளனர். 2026 தேர்தல் நிச்சயம் ஆட்சி மாற்றம் மட்டுமல்ல திமுகவிற்கு மிகப்பெரிய இழப்பாக அமையும். திருக்கோயில்களில் வேலைகள் முடியாமலேயே எண்ணிக்கை காட்ட வேண்டும் என்பதற்காக கும்பாபிஷேகம் நடத்துகின்றனர். முழுமையாக பணிகள் முடிவடையாமல் கும்பாபிஷேகம் நடத்துவது தவறு. அவர்களது ஆட்சிக்கு அது நல்லதல்ல. இவ்வாறு குறிப்பிட்டார்.

# மதுராந்தகம் அருகே அருள்மிகு ஸ்ரீ முத்தாலம்மன் திருக்கோவில் 164ஆம் ஆண்டு குடமுழுக்கு நன்னீராட்டு விழா

## விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல். திருமாவளவன் பங்கேற்பு

செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் அடுத்த சூனாம்பேட்டில் அருள்மிகு ஸ்ரீ முத்தாலம்மன் கோவில் 164 ஆண்டு திருக்குட நீர் பொழிவு நன்னீராட்டு விழாவில் வெகு விமர்சையாக நடைபெற்றது இவ்விழாவில் சிவாச்சாரியார்கள் மூன்று நாட்களுக்கு முன்பாகவே யாக சாலைகள் அமைத்து கணபதி பூஜை கோபூஜை, லட்சுமி பூஜை என விசேஷ பூஜைகள் செய்யப்பட்டது

பின்பு கிராம பொதுமக்கள் முன்னிலையில் யாக சாலையிலிருந்து கலசங்கள் புறப்பட்டு கோவிலை வலம் வந்த விடுதலை சிறுத்தை கட்சியின் தலைவர் தொல் திருமாவளவன் கரங்களால் விமான கலசத்திற்கு புனித நீர் ஊற்றி கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது தீபாரதனையும் காண்பிக்கப்பட்டு பின்பு பக்தர்கள் மீது புனித நீர் தெளிக்கப்பட்டது இதில் திரளான பக்தர்கள் உள்ளிட்ட விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மாநில மாவட்ட ஒன்றிய நகர பேரூர் நிர்வாகிகள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்



# காதலியுடன் மகனைக்கண்ட தாய்; மெட்ரோ நிலையத்திலேயே நிச்சயத்தை முடித்த விடியோ வைரல்!

காதலியுடன் சுற்றித்திரிந்த மகனை நேரில் கண்ட தாய், அப்பெண்ணுடன் திருமண நிச்சயத்தையே முடித்துள்ளார்.

காதலியுடன் மெட்ரோ ரயில் நிலையத்தில் இருந்த மகனைக் கண்ட தாய், அந்த இடத்திலேயே பெண்ணுடன் திருமண நிச்சயத்தை முடித்த விடியோ இணையத்தில் பலரால் பகிரப்பட்டு வருகிறது. வீட்டிற்காக வாங்கிச் சென்ற பழங்களை அப்பெண்ணுடன் பரிமாறி, இனிப்பு ஊட்டிவிட்டு பாரம்பரிய முறைப்படி திருமண நிச்சயம் முடிந்துவிட்டதாகக் கூறியுள்ளார். இதனை விடியோ பதிவும் செய்துள்ளனர்.





சமூக வலைதளங்களில் பகிரப்பட்டு வரும் விடியோவில், மகன் தனது காதலியுடன் மெட்ரோ ரயில் நிலையத்தில் அமர்ந்துள்ளார். கணவருடன் வெளியே சென்றுவிட்டு வீட்டிற்குத் தேவையான பொருள்களுடன் சென்றுக்கொண்டிருக்கும்போது பெண்ணுடன் அமர்ந்திருக்கும் மகனைக் கண்டு தாய் அதிர்ச்சி அடைகிறார்.

மகனிடம் விசாரித்து அவரைக் கண்டிக்கிறார். பின்னர் வாங்கிச் சென்ற பழங்கள், பூக்களை அப்பெண்ணிடம் கொடுத்துவிட்டு அவர்களுக்கு இனிப்பு ஊட்டுகிறார். பாரம்பரிய முறைப்படி திருமண நிச்சயம் முடிந்துவிட்டதாகக் கூறி அவர்களை ஆசிர்வாதம் செய்கிறார். தந்தையும் இருவரையும் ஆசிர்வாதம் செய்கிறார்.

ஆனால், மகன் தாயை கட்டுப்படுத்த முயற்சிக்கிறார். நமது குடும்பகௌரவம் என்ன ஆவது? என மகனிடம் தாய் கடிந்துகொள்கிறார். இதனை அங்கிருந்த ஒருவரை விடியோ எடுக்கும்படி தாய் கூறியுள்ளார். அதுவும் விடியோவில் பதிவாகியுள்ளது.

இந்த விடியோவின் முடிவில் மகனும் காதலியும் தந்தையின் காலில் விழுந்து ஆசி பெறுகின்றனர். இந்த விடியோ இணையத்தில் பலரால் பகிரப்பட்டு வருகிறது.

அப்பெண் மிகவும் பாக்கியசாலி என்றும், மகனை நல்வழிப்படுத்தும் நோக்கத்தில் கண்டிப்பதாகவும் பெண் பாதிக்கப்பட்டுவிடக் கூடாது என நினைப்பதாக பலர் கருத்துகளைப் பதிவிட்டு வருகின்றனர்.

மெட்ரோ ரயில் நிலையத்தில் எடுக்கப்பட்ட இந்த விடியோ பார்ப்பதற்கு திட்டமிட்டு எடுத்தது போலத் தெரிவதாகவும், உண்மையானது அல்ல எனவும் சிலர் கருத்துகளைப் பதிவிட்டு வருகின்றனர்.

# அமெரிக்காவுடன் 500 பில்லியன் டாலர் வணிகத்தில் பிரச்சனை இல்லை: பியூஷ் கோயல் கருத்து

அடுத்த 5 ஆண்டுகளில் அமெரிக்காவுடன் 500 பில்லியன் டாலர் மதிப்பிலான வணிகம் மேற்கொள்வதில் எந்தவித பிரச்னையும் இல்லை என மத்திய வணிகம் மற்றும் தொழில் துறை அமைச்சர் பியூஷ் கோயல் (பிப். 8) தெரிவித்துள்ளார்.

நாட்டின் வளர்ந்துவரும் பொருளாதாரம் 2 டிரில்லியன் டாலர் மதிப்புடைய பொருள்கள் இறக்குமதிக்குத் தேவையான சந்தையை உருவாக்கும் எனவும் குறிப்பிட்டார்.



தற்போது அமெரிக்காவிடமிருந்து சுமார் 300 பில்லியன் டாலர் மதிப்புடைய பொருள்களை பெற முடியும் என்றும், அவை தற்போது மற்ற நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு வருவதாகவும் கூறினார்.

இந்தியா - அமெரிக்கா இடையிலான வணிக ஒப்பந்தம் குறித்து பிடிஐ செய்தி நிறுவனத்திற்கு அளித்த பேட்டியில் பியூஷ் கோயல் தெரிவித்துள்ளதாவது:

நாம்மால் இன்று கூட 300 மில்லியன் டாலர் மதிப்புடைய பொருள்களை அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்ய முடியும். நாம் உலகின் பல நாடுகளில் இருந்து இறக்குமதி செய்து வருகிறோம். அடுத்த 5 ஆண்டுகளில் இது 2 டிரில்லியன் டாலர் மதிப்புடையதாக அதிகரிக்கும். நாட்டின் தேவை அதிகரிக்கும் என என்னால் உறுதிப்பட கூற முடியும் னக் குறிப்பிட்டார். இந்தியா - அமெரிக்கா இடையிலான வணிக ஒப்பந்தத்திற்கு பிப். 2ஆம் தேதி அதிபர் டொனால்ட் டிரம்ப் ஒப்புதல் அளித்தார். இதன்படி, இந்திய பொருள்கள் மீது விதிக்கப்பட்டிருந்த அதிகப்படியான 25% வரி, 18 சதவீதமாக குறைக்கப்படவுள்ளது. இதோடு மட்டுமின்றி ரஷியாவில் இருந்து எண்ணெய் இறக்குமதி செய்வதால் விதிக்கப்பட்ட கூடுதலான 25% வரியும் நீக்கப்பட்டுள்ளது. வேளாண்மை, நிலக்கரி, எரிசக்தி, தொழில்நுட்பம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் அமெரிக்காவுடனான வா்த்தகத்தை 500 பில்லியன் டாலராக உயர்த்தவும் இந்தியா முடிவுசெய்துள்ளது.

இந்த வணிக ஒப்பந்தப் பணிகள் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளதாகவும் விரைவில் ஒரு நாடுகளும் இணைந்து ஒப்பந்தம் தொடர்பாக கூட்டறிக்கை வெளியாகும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. 500 பில்லியன் வணிக ஒப்பந்தத்தில், ஏற்கெனவே ஒப்பந்தம் செய்யப்பட்ட போயிங் விமானங்களும் அடங்குமா? என்ற கேள்விக்கு பதில் அளித்த பியூஷ் கோயல்,

அமெரிக்காவில் இருந்து பெறுவதாக ஏற்கெனவே அறிவித்த இறக்குமதிகளும் 500 பில்லியன் டாலர் வணிகத்தில் அடங்கும் என்றும் அதன் தொடர்ச்சியாகவே வணிக ஒப்பந்தத்தின்படி இறக்குமதிகள் நடக்கும் எனவுக் கூறினார்.

நமக்கு விமானங்கள் தேவை. விமான என்ஜின்கள் தேவை. விமான உதிரி பாகங்களும் நாட்டின் தேவையாக உள்ளது. போயிங் விமானத் தேவைக்காக மட்டும் அமெரிக்காவுடன் ஏற்கெனவே 50 பில்லியன் டாலர் மதிப்பிலான வணிகம் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

அடுத்த 5 ஆண்டுகளுக்கு 80 முதல் 90 பில்லியன் டாலர் மதிப்பிலான உதிரி பாகங்களுக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. ஆனால், தற்போது முன்பை விட தேவை அதிகரித்துள்ளது. டாடா நிறுவனம் இன்னும் பல தேவைகளை முன்வைத்துள்ளது. கச்சா எண்ணெய், எல்.பி.ஜி. தவிர விமானத் துறைக்கு மட்டும் 100 பில்லியன் டாலருக்கும் அதிகமான வணிகம் நடைபெறவுள்ளது என்பது என்னுடைய கணிப்பு.

எஃகு துறையில் அசுர வேகத்தில் வளர்ச்சி அடைந்துகொண்டிருக்கிறோம். நாம் ஏற்கெனவே 17 - 18 மில்லியன் மதிப்பிலான நிலக்கரியை இறக்குமதி செய்துகொண்டிருக்கிறோம். ஸ்டீல் துறை வளர்ச்சியால் நிலக்கரி இறக்குமதி 300 பில்லியன் வரை அதிகரிக்கலாம் என பியூஷ் கோயல் கூறினார்.

# கர்நாடகத்தில் பயிற்சி விமானம் விழுந்து நொறுங்கியது

கர்நாடக மாநிலம் விஜயபுரா மாவட்டத்தில் தனியார் விமானம் விழுந்து விபத்துக்குள்ளானது. விஜயபுரா மாவட்டத்தில் உள்ள பபலேஷ்வர் தாலுகாவிற்குட்பட்ட மங்களூரு கிராமத்தில் உள்ள விவசாய நிலத்தில் விமானம் விழுந்து நொறுங்கியது. இரண்டு இருக்கைகள் கொண்ட விமானத்தில் பயிற்சியாளர் மற்றும் ஒரு பயிற்சி விமானி மட்டும் இருந்துள்ளனர். விமானம் விழுவதற்கு முன்பாகவே இருவரும் அதிலிருந்து வெளியேறியதால் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினர்.

இருப்பினும், இருவருக்கும் காயம் ஏற்பட்டுள்ளதால் அவர்கள் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இது 'ரெட் பேர்டு ஏவியேஷன்' நிறுவனத்திற்குச் சொந்தமான Cessna 172 ரக சிறிய பயிற்சி விமானம் என கூறப்படுகிறது. கல்புர்கியில் இருந்து பெலகாவி நோக்கிச் சென்றபோது, எஞ்சினில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக இந்த விபத்து நிகழ்ந்ததாக முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.



Printed by,Hiwins Printers,Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at ERODE, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.